உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னால் என்னுடைய பதில் உரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

6. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

இராணி மேரி கல்லூரி முதல் மாடி வராண்டா இடிந்து விழுந்ததால் ஊனமடைந்த மாணவி எம். ஷீலாவிற்கு இழப்பீடு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஆறரை கோடி மக்களின் நலனை முன்னிறுத்திச் செயல்படும், தலையாய கேந்திரமாகிய, தலைமைச் செயலகத்தை, பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகு, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமைக்க, இந்த அரசு முடிவெடுத்தது. ஒரு சிலர் அரசியல் காரணத்திற்காக, காழ்ப்புணர்ச்சியால், இந்த மகத்தான திட்டத்தை எதிர்த்து, மாணவிகளைத் தூண்டிவிட்டனர்.

5-5-2003 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி எண் 110-ன்கீழ் நான் வெளியிட்ட அறிக்கையில் சில சுயநலவாதிகள் சௌகரியமாக மறந்துவிட்ட, மறைத்துவிட்ட, ஒரு அப்பட்டமான உண்மையை அப்போது நான் தெளிவாக்கினேன்.

இன்றைக்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு, இன்னும் சரியாகச் சொல்லப்போனால், 8-4-1991 அன்று காலை 11-00 மணியளவில் இராணி மேரி கல்லூரியில், எம்.ஏ. ஆங்கில இலக்கியம் இறுதியாண்டு படித்து வந்த எம். ஷீலா என்ற மாணவி, ஆங்கிலத் துறையின் ஹாலுக்கு வெளியே உள்ள வராண்டாவில் நின்று, தனது சிநேகிதியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அந்த இரண்டு மாணவிகளின் பளுவைக்கூடத் தாங்க இயலாமல், அந்த வராண்டா திடீரென்று உடைந்து, அந்த இரண்டு மாணவிகளும் முதல் தளத்திலிருந்து தரைத் தளத்தில் கீழே விழுந்தனர். இதனால்

சட்டமன்றம் LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

எம். ஷீலா என்ற அந்த மாணவி, கடுமையான காயமுற்று, இரண்டரை மாதக் காலம், மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்ட பிறகும், அறுவை சிகிச்சை நடத்தப்பட்ட பிறகும், நிரந்தர ஊனம் அடைந்து, நடக்க முடியாமல், ஊன்றுகோல்களின் துணையோடு மட்டுமே நடக்கின்ற நிலை ஏற்பட்டது. அதற்குப் பின், கல்லூரி நிர்வாகமும், பொதுப் பணித் துறையும், தனக்கு 5 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும் என்று, 1992-ல் அந்த மாணவி உயர் நீதிமன்றத்தில், வழக்குத் தொடுத்தார். பின்னர் 1998-ல், தனக்கு 9 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும் என்று மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் தனது கோரிக்கையைத் திருத்தி சமர்ப்பித்தார். இந்த உண்மைகள் எல்லாம், எனக்கு வெகு அண்மையில்தான் தெரிய வந்தன. அதுவும், தற்செயலாகத்தான், இவற்றைத் தெரிந்துகொள்ள நேரிட்டது. ஆனால் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்திலேயே, அதாவது 1991 முதல் 1996 வரையிலான அந்த ஐந்து ஆண்டுகளிலேயே, நஷ்டஈட்டைக் கொடுத்திருக்கலாமே என்று கேட்டுள்ளார்.

கட்டடம் இடிந்து விழுந்து, மாணவி ஷீலா ஊனமுற்ற நிகழ்ச்சி, 8-4-1991 அன்று நடந்தது. அதாவது, குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் நடந்தது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் 1991-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முன், நடைபெற்ற சம்பவம் அது. இந்தச் சம்பவம் நடைபெற்றது 1991 ஏப்ரல் மாதத்தில். நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது 1991 ஜூன் மாதத்தில், மாணவி ஷீலா, நஷ்டஈடு கேட்டு, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது 1992 ஆம் ஆண்டில். ஆனால் இந்தத் துயர சம்பவத்தைப் பற்றியோ, உயர் நீதிமன்றத்தில் அவர் தொடுத்த வழக்கு பற்றியோ, அப்போது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. பொதுப் பணித் துறை அலுவலகத்திலேயே, இதுபற்றிய விவரங்கள், முடங்கிக் கிடந்திருக்கின்றன.

இராணி மேரி கல்லூரி வளாகத்தில், தலைமைச் செயலகத்தை உருவாக்குவதை, எதிர்க்கின்ற வழக்கு, சமீபத்தில் உயர் நீதிமன்றத்திற்கு வந்தபோது, அரசு தலைமை வழக்கறிஞர், தமது வாதத்தின்போது, மாணவி ஷீலாவின் விபத்து பற்றிய விவரங்களை நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார். அப்போதுதான் எனக்கு இதைப்பற்றித் தெரியவந்தது. அப்போதும்கூட சில அடிப்படைத் தகவல்கள் மட்டும்தான், எனக்குச்

சொல்லப்பட்டன. எனவேதான், 4-4-2003 மற்றும் 10-4-2003 அன்று நான் இந்த அவையில் விதி 110-ன்கீழ் அளித்த அறிக்கைகளிலும்கூட, மாணவி ஷீலாவைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஏனென்றால், அதுவரை, இந்தத் துயர சம்பவத்தைப்பற்றி, என்னிடம் எடுத்துக் கூறாமல், ஒரு சதியின் பேரிலே, என்னிடமிருந்து, அது மறைக்கப்பட்டுவிட்டது. பின்னர், அரசு தலைமை வழக்கறிஞர், உயர் நீதிமன்றத்தில், இதுகுறித்துக் கூறியதையடுத்து, இவ்வாறு கல்லூரியில் படித்த ஒரு மாணவி, தனது வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட துயரத்தைக் கேள்வியுற்று, அதைப்பற்றிய முழு விவரங்களையும், எனக்குத் தெரிவிக்கும்படி கூறினேன். இதுபற்றிய முழு விவரமும் எனக்குத் தெரிய வந்தபோது, நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். இப்படி மாணவி ஷீலா பற்றிய தகவலை, நமக்குத் தெரியாமல் செய்து விட்டார்களே என்று மிகவும் வருத்தம் அடைந்தேன்.

முற்பகல் 11-20

வசந்தத்தின் தலைவாசலில் நிற்க வேண்டிய ஒரு பெண், தனது வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு, துயரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிந்து, உடன் அவருடைய இழப்புக்கு, உரிய பரிகாரத்தை வழங்க வேண்டுமென்று நினைத்தேன். உடனே பாதிக்கப்பட்ட அந்தப் பெண், செல்வி எம். ஷீலாவிற்கு 9 இலட்சம் ரூபாய், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளேன் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையின்மீது விவாதம். பேசுகிற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் வள்ளல் பெருமான்.

***டாக்டர் பி. வள்ளல் பெருமான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.